# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1413/21 - 2005 ඔක්තෝබර් 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2005.10.06

1413/21 ஆம் இலக்கம் – 2005 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பீ 21/78V

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகிய நான், அரசியலமைப்பின் 44ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 1995ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கச் சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்ட 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, அக்வைனாஸ் உயர் கற்கைகள் கல்லூரி தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின்கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட பட்டங்களின் பட்டமளிப்பிற்கு இட்டுச் செல்லும் உயர் கல்வியின் அபிவிருத்தியின் நோக்கத்திற்கு பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக மேற்கூறப்பட்ட நிறுவகத்தை இக்கட்டளையின் மூலம் அங்கீகரிக்கின்றேன்.

அட்டவணை

1. பொதுக் கலைமாணிப் பட்டம் (பீ. ஏ.)
2. மதக் கற்கைகளில் கலைமாணிப் பட்டம் (மதக் கற்கைகளில் பீ. ஏ.)
3. தகவல் தொழில்நுட்பவியலில் இளமாணிப் பட்டம் (பீ. ஐ. ரி.)
4. உளவியல் மற்றும் ஆலோசனையியம்பலில் விஞ்ஞானமாணிப் பட்டம் (பீ. எஸ்சீ.)

சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க,
சனாதிபதி.

கொழும்பு,
2005.09.28.

10–399


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.